
# சென்னை தெற்கு மாவட்டக் கழகம் சார்பில் – அமைச்சர் மா.சுப்பிரமணியனின் எழுச்சிமிகு ஏற்பாட்டில் நடைபெற்ற பொங்கல் விழா!

# துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் பங்கேற்றுச் சிறப்பித்த எழில்மிகு காட்சிகள்!





















வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறையின் சார்பில் இலவச வீட்டுமனைப் பட்டா வழங்கும் நிகழ்ச்சியில் அமைச்சர் மருத்துவர் மா.மதிவேந்தன், நாமக்கல் கிழக்கு மாவட்டக் கழகச் செயலாளர் கே.ஆர்.என். ராஜேஸ்குமார் எம்.பி. ஆகியோர் கலந்து கொண்டு 742 பயனாளிகளுக்கு இலவச வீட்டுமனை பட்டாக்களை வழங்கினர். இந்நிகழ்ச்சியில் சட்டமன்ற உறுப்பினர் பெ. இராமலிங்கம் எம்.எல்.ஏ., மாநகராட்சி மேயர் து.கலாநிதி, மாவட்ட வருவாய் அலுவலர் மா.க.சரவணன், துணை மேயர் செ.பூபதி, நகர கழக செயலாளர்கள் ராணா ஆனந்த், அ.சிவக்குமார், ஒன்றிய கழக செயலாளர்கள் கே.பி. இராமசுவாமி, கே.பி.ஜெகநாதன், ஆர்.எம்.துரைசாமி, நகர கழக செயலாளர் என்ஆர்.சங்கர் மற்றும் கழக நிர்வாகிகள் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



தருமபுரி மேற்கு மாவட்டம் கடத்தூரில் திராவிடப் பொங்கல் விழாவையொட்டி மாவட்ட அளவிலான நடைபெற்ற கபடி போட்டியினை தருமபுரி மேற்கு மாவட்டச் செயலாளர் முனைவர். பி.பழனியப்பன் தொடங்கி வைத்தார். உடன் சிவப்பிரகாசம், முத்துக்குமார், முனியப்பன், முருகன், பி.கே.முரளி, டி.சந்திரசேகர், மாது, பி.என்.சி.மகேஷ்குமார் மற்றும் ஏராளமான இளைஞர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.



தமிழ்நாடு முதலமைச்சர் திராவிட நாயகர் மு.க.ஸ்டாலின் அவர்களின் வழிகாட்டுதல்களின்படி கொரடாச்சேரி எம்.ஜி.ஆர்.அரசு கல்லூரிக்கு இலவச லேப்டாப்களை மாவட்டச் செயலாளர் பூண்டி.கே.கலைவாணன் எம்.எல்.ஏ., வழங்கினார். ஒன்றிய செயலாளர்கள் ஆர்.பாலச்சந்திரன், சேகர் கலியபெருமாள் , பேரூர் செயலாளர் பூண்டி.கே.கலைவேந்தன் ஆகியோர் உடன் பங்கேற்றனர்.



நாகை மாவட்டம் நாகையில் உள்ள சி.எஸ்.ஐ., மேல்நிலைப்பள்ளி வளாகத்தில் உள்ள நியாய விலைக் கடையில் நடைபெற்ற நிகழ்ச்சியில் குடும்ப அட்டைதாரர்களுக்கு 'திராவிட மாடல்' அரசின் நாயகர், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் அறிவித்து, தொடங்கி வைத்த பொங்கல் பரிசுத் தொகுப்பான அரிசி, வெல்லம், முழு கரும்பு மற்றும் ரூ.3,000/ ரொக்கத்தினை நாகை மாவட்டக் கழக செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவருமான என். கௌதமன், நாகை மாவட்ட ஆட்சித்தலைவர் ப.ஆகாஷ், நாகை சட்டமன்ற உறுப்பினர் ஜெ.முகம்மது ஷா நவாஸ் ஆகியோர் குடும்ப அட்டைதாரர்களுக்கு வழங்கி தொடங்கி வைத்தனர். உடன் நாகை நகர கழக செயலாளரும், நகர்மன்ற தலைவருமான இரா. மாரிமுத்து, நாகூர் நகர கழக செயலாளர் எம்.ஆர். செந்தில்குமார், கூட்டுறவு சங்கங்களின் இணைபதிவாளர் திருமதி பாத்திமா சுல்தானா மற்றும் பலர் உள்ளனர்.